தலைமைச் செயலகத்தில், நேற்று (17.04.2025) நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு கல்குவாரி, கல் அரவை (Crusher) மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்கத்தினரின் கோரிக்கைகள் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர் டாக்டர். பு. உமாநாத், , தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் சையத் முசாமில் அபாஸ், (ஓய்வு), மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நிபுணர் குழு1 தலைவர் டேவிதார், (ஓய்வு),மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு நிபுணர் குழு2 பழனிகுமார், (ஓய்வு), புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் இ. சரவணவேல்ராஜ், சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஆ. ர. ராகுல்நாத், கூடுதல் முதன்மை தலைமை வன பாதுகாவலர் திருமதி ஆ. ஜெயந்தி முரளி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.4.2025) எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற பாபா சாஹேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்த நாள், அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட 75 வது ஆண்டு. எழும்பூர் நீதிமன்றத்தின் 110 வது ஆண்டு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் நீதிபதிகள் நீதியரசர் எஸ்.எஸ்.சுந்தர், நீதியரசர் ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, நீதியரசர் எம்.நிர்மல் குமார், நீதியரசர் டி.பரத சக்கரவர்த்தி. சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன். ஜே.ஜே.எபினேசர். சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் முதன்மை நீதிபதி எஸ்.கார்த்திகேயன், தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி என். கோதண்டராஜ். எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் துரை கண்ணன், செயலாளர் எஸ்.பாரதி உள்பட நிர்வாகிகள், வழக்கறிஞர்கள், சட்டக்கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அரசியலமைப்பைப் பாதுகாக்க உறுதியுடன் இணைந்து செயலாற்றுவோம்!

மக்களின் நம்பிக்கையாக மட்டுமல்ல, மாநில அரசுகளின் நம்பிக்கையாகவும், இன்றைக்கு நீதித்துறைதான் இருக்கிறது!

எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்க 110-வது ஆண்டு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

சென்னை, ஏப். 18-

சென்னை, எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாள் விழா, அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட 75வது ஆண்டு விழா எழும்பூர் நீதிமன்றத்தின் 110வது ஆண்டு தொடக்கவிழா ஆகியவற்றைக் கொண்டாடுகிற வகையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர், ``அண்ணல் அம்பேத்கர் உருவாக்கித் தந்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை நாம் பாதுகாத்தால், அரசியலமைப்புச் சட்டம் நம்மையும் நாட்டையும் பாதுகாக்கும்" என்று குறிப்பிட்டார்.

பாபா சாஹேப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் 135வது பிறந்த நாள் விழா, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட 75வது ஆண்டு விழா, எழும்பூர் நீதிமன்றத்தின் 110வது ஆண்டு தொடக்கவிழா, என முப்பெரும் விழாவாக நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டுள்ள உங்கள் அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

யாராலும் மீற முடியாது

இந்த சிறப்புக்குரிய விழாவில் பங்கேற்கும் வாய்ப்பினைத் தந்த எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தினருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ``அழைத்தவுடன் உடனே ஒப்புக்கொண்டு வருகை தந்ததற்கு நன்றி" என்று இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். வழக்கறிஞர்கள் எப்போது அழைத்தாலும் அது விழாவாக இருந்தாலும் சரி, வழக்காக இருந்தாலும் சரி ஒப்புதல் அளித்து உடனடியாக வந்திருக்கின்றேன். உங்கள் பேச்சை யாராலும் மீற முடியாது.

இன்றைக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிற குரல் தமிழ்நாடு மட்டுமல்ல, இந்திய ஒன்றியத்தின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் கேட்கிறது. ஏனென்றால், ஒவ்வொரு சாதாரண குடிமகனுக்கும் கடைசி நம்பிக்கையாக இருப்பது அரசியலமைப்புச் சட்டம் மட்டும்தான். அப்படிப்பட்ட அரசியலமைப்பின் மாண்பை நிலைநாட்டுகிற நீதியரசர்கள், வழக்கறிஞர்கள், சட்டவல்லுநர்களைச் சந்திப்பதில் மிகுந்தபெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

வாழ்க்கை வரலாறு

இன்றைக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களை, நாம் எல்லாம் போற்றுகிறோம், புகழ்கிறோம். ஆனால், அம்பேத்கர் அவர்களுடைய தொடக்க காலம் எப்படி இருந்தது? அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி ஒரு விஷயம் எழுதப்பட்டிருக்கிறது.

``பள்ளியில் படிக்கிறபோது, அம்பேத்கருடைய பாட நோட்டுகளை யாரும் திருத்த முன்வரவில்லை. வகுப்பில், அவரிடம் யாரும் கேள்வி கேட்கவும் முன்வரவில்லை. காரணம்... தீட்டாகிவிடும் என்கிற அச்சம்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு கொடுமைகளுக்கு ஆளான ஒருவர், படிப்பைத் தொடர்வதே மிகப்பெரிய விஷயம். ஆனால், அம்பேத்கர் அவர்கள், படிப்பைத் தொடர்ந்தது மட்டுமல்ல; நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தையே எழுதுகிற அளவுக்கு அவர் படித்தார். ஒடுக்கப்பட்ட - விளிம்புநிலை மக்களின் உரிமைக்காக களத்தில் இறங்கிப் போராடினார். அண்ணலின் நோக்கம், சமூக சமத்துவம் என்பதுதான். சமத்துவத்திற்குத் தடையாக இருந்த அனைத்தையும் அவர் ஒழிக்கவேண்டும் என்று போராடினார். ஆகவேதான், அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாளை தமிழ்நாடு அரசு சமத்துவ நாளாக அறிவித்தது.

முற்போக்கு நடவடிக்கைகள்

3 நாட்களுக்கு முன்பு கூட அண்ணலின் பிறந்த நாள் விழாவை, நம்முடைய அரசு சார்பில் சமத்துவ நாள் விழாவாக சிறப்பாகக் கொண்டாடினோம். நீதிக்கட்சி காலம் முதல் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலம் வரை, சட்டத்தின் மூலம் நீதிமன்ற ங்களின் வாயிலாக, ஏராளமான முற்போக்கு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

`அம்பேத்கர் என்றால், அவர், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டுமான தலைவர்' என்று பலர் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், இட ஒதுக்கீடு சமூகநீதி கிடைக்கிறது என்றால், அதற்கான கதவுகளை, அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம், திறந்து வைத்தவர் அண்ணல் அம்பேத்கர். இட ஒதுக்கீட்டுக்காக அரசியலமைப்புச் சட்டத்தை முதன் முறை திருத்த வைத்தவர் தந்தை பெரியார் அவர்கள். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வடக்கே பிறந்து இருந்தாலும், அண்ணலின் கொள்கைகளும் தந்தை பெரியாரின் கொள்கைகளும், பல இடங்களில் பொருந்திப் போகக்கூடியவை.

சட்டப் போராட்டம்

பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு என பெயர் சூட்டியது முதல், சுய மரியாதைத் திரும ணங்கள் செல்லுபடியாகும், இருமொழிக்கொள்கை பின்பற்ற ப்படும் என்பது வரை, ஏராளமானவற்றை சட்டங்கள் ஆக்கினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தன்னுடைய வாழ்நாளில் எத்தனையோ சட்டப் போராட்டங்களைச் சந்தித்து வெற்றிகண்டவர். தன்னுடைய மறைவுக்குப் பின்னரும் சட்டப் போராட்டம் நடத்தி, தனக்கான இடத்தைப் பெற்றவர்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வழக்கை விசாரித்த அமர்வில் இடம் பெற்றிருந்த நீதிபதிகளில் ஒருவரான மாண்பமை நீதியரசர் எஸ்.எஸ்.சுந்தர் அவர்கள் இங்கே இருக்கிறார். அவருக்கு என் நன்றி.

நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்ட, சட்டப் போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். நீட் தேர்வை ஒழிக்க வேண்டும் என்ற மாணவர்கள், பெற்றோர்களின் கோரிக்கையை நிறைவேற்ற, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் தான் சட்டமன்றத்தில் நீட் விலக்கு மசோதா கொண்டு வரப்பட்டது. அந்த மசோதாவுக்கு இன்றைக்கு ஒப்புதல் கிடைக்காத நிலையில், மீண்டும், நமது சட்டப்போ ராட்டத்தை, சட்டத்தின் மீது நம்பிக்கைக்கொண்டு நடத்திக்கொண்டிருக்கிறோம்.

நல்ல செய்தி கிடைத்திருக்கிறது

மருத்துவப்படிப்பில் அகில இந்திய ஒதுக்கீட்டில் இந்தியா முழுவதும் உள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை, சட்டப்போராட்டம் நடத்தி உறுதி செய்ததும் நம் முதலமைச்சர் அவர்கள்தான். அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை நிலைநாட்டவும், கழக அரசு உச்சநீதிமன்றத்தில் போராடிக்கொண்டிருக்கிறது. அண்மையில், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்ப ட்டுள்ள வக்ஃப் சட்டத்திருத்தத்துக்கு எதிராக, கழக அரசும், தி.மு.கழகமும் வழக்குகளைத் தொடர்ந்து இருக்கின்றன. இன்றைக்கு இந்த வழக்கில், ஒரு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது உச்சநீதிமன்றம் அந்தச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டிருக்கிறது. நிச்சயமாக, இந்தப் போராட்டத்தையும் நம் முதலமைச்சர் அவர்கள் தொடர்வார்கள்.

மாநில சுயாட்சியை நிலைநாட்ட, ஓய்வுபெற்ற நீதியரசர் குரியன் ஜோசப் தலைமையிலான குழுவை அமைத்து, வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் வெளியிட்டார்கள். சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்புகிற சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் இழுத்தடிக்கும் வேலைகளும் நடக்கின்றன.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக, தமிழ்நாடு அரசு நீதித் துறையை நம்பிக்கையுடன் நாடியது. அந்த நம்பிக்கை வீண்போகாத வகையில், உச்சநீதிமன்றம் சமீபத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு தீர்ப்பை ஒட்டுமொத்த நாட்டுக்கே தந்தது. எனவே, தனிப்பட்ட சாமானிய மக்களின் நம்பிக்கையாக மட்டுமல்ல, மாநில அரசுகளின் நம்பிக்கையாகவும், இன்றைக்கு நீதித்துறை தான் இருக்கிறது. ஆகவே தான், நீதிமன்றங்களுக்கான தேவைகள், வழக்கறிஞர்கள் நலன் போன்றவற்றிற்காக கழக அரசு ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சென்னையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தை, ரூ.315 கோடி மதிப்பில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2022ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டினார்கள். அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

10 லட்சம் ரூபாயாக உயர்வு!

வழக்கறிஞர் நலநிதியை 7 லட்சம் ரூபாயில் இருந்து 10 லட்சமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உயர்த்தினார்கள். வழக்கறிஞர்களின் நலன் காக்கவும், நீதிமன்றங்க ளின் கட்டமைப்பை மேம்படுத்தவும், கழக அரசு தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும். நீதித்துறை யைப் பொறுத்தவரை தமிழ்நாட்டுக்கு இன்று இரண்டு முக்கியமான கோரிக்கைகள் இருக்கின்றன. ஒன்று, சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக கொண்டு வர வேண்டும். இன்னொன்று, உச்சநீதிமன்றக் கிளையை, தமிழ்நாட்டில் அமைத்திட வேண்டும் என்பது. இதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார்கள். இதை சாத்தியப்படுத்த வேண்டும் என்று எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கம் உட்பட பல்வேறு வழக்கறிஞர் அமைப்புகளும் குரல் கொடுத்து வருகிறார்கள். இந்தக் கோரிக்கையை வென்றெடுக்க நாம் தொடர்ந்து அயராது உழைப்போம்.

இந்த நேரத்தில் ஒரு கருத்தை நிறைவாகச் சொல்ல விரும்புகிறேன். அண்ணல் அம்பேத்கர் அவர்கள் அரசியல் நிர்ணய சபையில், அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றி ஆற்றிய உரையை இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.

``அரசியலமைப்புச் சட்டம் எவ்வளவு நல்லதாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துவோர் கெட்டவர்களாக இருந்துவிட்டால், அரசியலமைப்புச் சட்டமும் கெட்டதாகிவிடும். அதேபோல் ஒரு அரசியலமைப்புச் சட்டம் எவ்வளவு கெட்டதாக இருந்தாலும், அதை நடைமுறைப்படுத்துவோர் நல்லவர்களாக இருந்தால், அந்த அரசியலமைப்புச் சட்டமும் நல்லதாக மாறும்", என்று சொன்னார் சட்டமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்கள்.

எனவே, அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதுடன், சரியான நபர்களின் கரங்களில் அது இருப்பதையும் நாம் உறுதி செய்ய வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தை நாம் பாதுகாத்தால், அந்த அரசியலமைப்புச் சட்டம் நம்மையும் - நாட்டையும் பாதுகாக்கும். ஆகவே, அண்ணல் அம்பேத்கரின் பிறந்த நாள் - அரசியலமைப்புச் சட்டம் ஏற்கப்பட்ட 75வது ஆண்டு விழா - எழும்பூர் நீதிமன்ற த்தின் 110 வது ஆண்டு விழா, ஆகியவற்றைக் கொண்டாடும் இவ்வேளையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை பாதுகாக்க, நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் - உறுதியுடனும் செயல்படுவோம் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

இவ்வாறு அவர் பேசினார்.

பங்கேற்றவர்கள்

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா, எம்.நிர்மல்குமார், டி.பரத சக்கரவர்த்தி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்ற முதன்மை நீதிபதி எஸ்.கார்த்திகேயன், தலைமை பெருநகர குற்றவியல் நீதிபதி என்.கோதண்டராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் ஐ.பரந்தாமன், ஆர்.டி.சேகர், தாயகம் கவி, எபினேசர் மற்றும் மருதுகணேஷ், வானவில் விஜய், எழும்பூர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் தலைவர் துரைகண்ணன், செயலாளர் பாரதி, துணைத் தலைவர் பாபு, இணைச் செயலாளர் பாலமுருகன், பொருளாளர் யோகேஷ் வரன், நூலகர் பாபு, வழக்கறிஞர்கள் மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.